# சதக இலக்கியம் காட்டும் அறம்

**வெ. வினி மச்சாடோ**
**உதவி பேராசிரியர், தமிழ்த் துறை**
**ஸ்டெல்லா மாரீஸ் கல்லூரி,**
**சென்னை.**

## ஆய்வுச் சுருக்கம்

உலகில் எந்த உயிருக்கும் சிறிதளவும் துன்பம் தராத நினைவுகளும், சொற்களும், செயல்களும் அறமாகும். ஆகவே ஒவ்வொரு மனிதனும் தன்னைப் போன்றே பிறரையும் நேசிக்க, மதிக்க தெரிந்திருப்பது மிக அவசியமான ஒன்று. இக்கருத்தையே அடிப்படையாகக் கொண்டு ஆய்வு அமைந்துள்ளது.

மனித பண்புகளுள் நல்லதும் உள. தீயதும் உள. இப்பண்புகளுள் நல்லவற்றை மேம்படுத்தி கொள்வது பற்றியும், தீயவற்றை விலக்கிக் கொள்வது பற்றியும் நீதி சதகங்களின் வாயிலாக விவரிக்கப் பட்டுள்ளது. மனித வளர்ச்சிக்கு தடையாகக் இருக்கக் கூடிய கோபமானது ஒருவனை முழுவதும் அழித்து விடும். பொறாமையால் வாழ்க்கையின் வளம் குறைந்து விடும். பொய்மை மற்றும் புறங்கூறுதல் என்ற குணத்தால் குடும்பமும் அழிந்து, பாவ வாழ்வை மேற்கொள்ள நேரிடும். தற்பெருமை வீணானது. தீயோர் நட்பினால் எத்தகைய காரியமும் நொடி பொழுதில் கெடும். மனிதன் தேடி ஓடுகின்ற வாழ்க்கை, யாக்கை, மற்றும் செல்வம் போன்றவை நிலையற்றது என்பதை சதக நூல்கள் வாயிலாக விளக்கப்பட்டுள்ளது.

மேலும் மனிதன் தன் வளர்ச்சியை மேம்படுத்திக் கொள்ள தன்னோடு என்றென்றும் பாதுகாப்பாய் வைத்துக் கொள்ளக் வேண்டிய குணமாக முதலில் ஒழுக்கமும், அதனையடுத்து

வலிமையான எதிர்ப்பையும், தகாதவர்களின் செயல்களையும் வெல்ல பொறுமை மிக அவசியம் என்பதையும், மனம் பொருந்திய அன்புடன் ஒருவரோடு ஒருவர் ஒற்றுமையுணர்வுடன் சமூகத்தில் வாழும் போது வெற்றி பெறலாம். மானத்துடன், நடுவுநிலை தவறாமல் நல்ல வார்த்தைகளை மட்டுமே பயன்படுத்தும் போது நிறைவான வாழ்க்கையையும் அடைந்து கல்வியறிவுடன் பெரியோர் சொல் கேட்டு ஆணவமின்றி அடக்கத்துடன் நடக்கும் போது நன்னிலைக்கு மனிதன் செல்வான் என்பதை இவ்விலக்கியம் சுட்டுகின்றது. இப்பண்புகளை சீர்த்தூக்கிப் பார்க்கும் வகையில் ஆய்வானது அமைந்துள்ளது.

**முன்னுரை**

தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்களைச் சங்க இலக்கியம், சமய இலக்கியம், அற இலக்கியம், சிற்றிலக்கியம், நவீன இலக்கியம் என்று பல வகையாகப் பாகுபாடு செய்யலாம். சங்க இலக்கியத்திற்கு அடுத்த நிலையில் சிறப்புடையனவாகப் போற்றப்படுவன அற இலக்கியமும், சமய இலக்கியமும் ஆகும். சங்க இலக்கியத்திற்குப் பின்னர் அற நூல்கள் தமிழில் தோன்றியுள்ளன.

சிந்தனைக்கும், அறிவுக்கும், முதலிடம் தந்து உணர்வும், கற்பனையும் சிறிதளவு கலக்க அமைவன அற இலக்கியங்களாகும்.

கற்பவரின் உணர்ச்சியை தூண்டாது, சிறந்த நற்கருத்துக்களை அறிவுறுத்தி அவர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துதையே நோக்கமாகக் கொண்டவை அற நூல்கள். இவை உணர்ச்சியைத் தூண்டாமல் அறிவைத் தூண்டுவன. அறிவுறுத்துவதையே குறிக்கோளாக கொண்டனவாகும். மனிதனின் உணர்ச்சி, விருப்பு,

வெறுப்பு, அறிவு ஆகிய மனப் பண்புகளுள் அறிவாற்றலைத் தூண்டுவதாக அமைவது அற இலக்கியம் ஆகும்.

மனிதனுடைய வாழ்க்கை ஐம்புலன்களை அடிப்படையாகக் கொண்டு வாழும் வாழ்வு மட்டுமன்று. இவற்றை உணர்ந்து, அறிந்து மனத்தால் வாழும் வாழ்க்கையாகும். அறியாமை வாயிலாக வரும் துன்பங்களை நீக்கி இன்பத்தை பெறும் பொருட்டே இவனிடம் பகுத்தறிவுள அமைந்துள்ளது. இதனையுணர்ந்த தொல்காப்பியனார்,

'எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான்அமர்ந்து வரூஉம் மேவற் றாகும்" 1

என்று கூறியுள்ளார்.

'இந்நிலவுலக வாழ்வில் மக்கள் எல்லோரும் அடைதற்கரிய உறுதிப் பொருள்களை அறம், பொருள், இன்பம், வீடு என உலகத்தோரும் சமயத்தோரும் பாகுபடுத்திக் கூறுவதை நாம் அறிவோம். எல்லா உயிர்களாலும் விரும்பி நுகரப்படுவது இன்பம் அந்த இன்பத்திற்குக் காரணமாக அறிவுடைய மக்களால் ஈட்டப்படுவது பொருள் பிறர்க்குத் தீங்கு நினையாத மாசற்ற மனத்தால் பொருள் செய்தொழுகும் முறை அறம்." 2

நுகர்தல், வேட்கை முறை பற்றி,

'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்(கு)
அன்பொடு புணர்ந்த ஐந்திணை" 3

செய்கை முறை பற்றி,

'அந்நிலை மருங்கின் அறம்முத லாகி
மும்முதல் பொருட்கும் உரிய என்ப." 4

என்று கூறுவர் தொல்காப்பியர்.

'அறம், பொருள், இன்பம், வீடு அடைதல்
நூற்பயனே" 5

என்பது நன்னூல் விதி. வழி வழியாக தமிழர்கள்பால் மரபாக வழங்கி வந்த கருத்தே இலக்கணத்தில் நூற்பா வடிவில் காணப்பெறுகின்றது.

"வடமொழிவாணர்கள் இக்கருத்தையே தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்று கூறுவர். இந்த நான்கு பொருள்கள் இன்பம் நீங்கலாக ஏனைய மூன்றையும் முன்னோர் ' புறப்பொருள்' என்று வழங்கினர். சுருங்கக் கூறின் இன்பம் ' அறம்' என்றும் பொருள் புறம் என்றும் கூறி விடலாம். பொருளை ஒழுங்காகப் பயன்படுத்துவதனால் சிறந்த பேரின்பமாகிய வீடு பேறு உண்டாதலின் ஒழுங்குமுறை என்னும் அறமும், அதன் பயனாகிய வீடும் பொருளோடு சேர்த்துப் புறப்பொருள்| என வழங்கலாயின." 6

**அறம் - ஒரு விளக்கம்**

"அறு + அம் - அறம் என இயைந்து விதியானும், விலக்கானும் செய்வன, தவிர்வனவற்றை வரையறுப்பது எனப் பொருள் தரும். அவ்வினை மனித வாழ்வில் கொள்ளத்தக்கனவும், தள்ளத் தக்கனவும், இவையென வரையறுப்பது 'அறம்' எனலாம்" 7 என்று ச.தண்டபாணி தேசிகர் அறத்திற்கு விளக்கம் தந்துள்ளார்.

"மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே, முழு நிறை வடிவமே, அறம் என்று கூறுவர். பிறவிதோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையின் பயனாகிய அறியாமையை நீக்கித் தெளிவதே அறம்" 8 என்று கூறப்படுவதுண்டு.

உலகில் எந்த உயிருக்கும் சிறிதளவும் துன்பம் தராத நினைவுகளும், சொற்களும், செயல்களும் அறமாகும்.

மு.வ. ' அறம்' பற்றிக் குறிப்பிடுகையில் " கடவுளின் ஒழுங்கு முறை ஒன்று இருக்கும். அதைத்தான் அறநெறி என்று சொல்லலாம்." 9 'அறம்' என்பது எல்லாருடைய மனத்திலும் உள்ள பொதுச் சட்டம், இயற்கைச் சட்டம்" என்கிறார்.10

"மனிதனுடைய செயல்கள் எல்லாம் ஒழுங்குப்படுத்துவது தூய்மைப்படுத்துவது அறம்"11 என அறம் என்ற சொல்லுக்குத் திருக்குறள் பொருளகராதி விளக்கம் கூறுகிறது.

"அறம் என்னும் சொல் தருமம், புண்ணியம், தகுதி, ஞானம், நோன்பு,தீப்பயன் உண்டாக்கும் சொல், அறக்கடவுள், இயமன் என்னும் எண்வகைப் பொருள்களையுடையதாக" 12 தமிழ்ப் பேரகராதி கூறுகிறது.

அறம் என்ற சொல்லுக்கு, "நல்வினை, ஐயம் ( பிச்சை), ஏழைகட்கு இலவசமாகக் கொடுப்பது, நோயாளிகட்கு இலவசமாக மருந்தீகை, நலமானது, இன்பம் ( சுகம்), தகுதியானது, கற்பு நோன்பு, அறப்பயன் (புண்ணியம்), சமயம், ஓதி ( ஞானம்), அறச்சாலை, அறத் தெய்வம், நடுநிலையறம் பேணும் கூற்றுவன்" 13 எனப் பல்வேறு வகையான பொருள்களைச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி தருகின்றது.

"மனச்சான்றே மாசு நீக்கும். மனமாசு நீக்கமே அறம். அறவழியே இறைவழி." 14 என்ற வரிகளுக்கு ஏற்ப உலக மானுடம், எங்கும், என்றும், எவ்வகை மாறுதலும் இன்றிப் பின்பற்றத் தக்க பொதுமையான அறநெறிகளைத் தொகுத்தும், பகுத்தும் சதக இலக்கியங்கள் வழங்கியுள்ளன.

உலக மக்கள் அனைவரும் தம் வாழ்நாளில் இயற்கையோடும், இறையோடும், மக்களோடும், பிற உயிர்களோடும் ஒட்டி, உணர்ந்து வாழ்தலுக்குரிய அறநெறிகளை நிகழ்வுகள் வழியும், உவமைகளின் வழியும் விளக்கும் இலக்கியமே சதகமாகும். உலகையும், உலக மானுடத்தையும் நன்குணர்ந்து, உதவி வாழ்வதற்குரிய வாழ்வியல் நெறிகளை வழங்கியுள்ளன.

நீதிச்சதங்கள் இறைவனை முன்னிலைப் படுத்தி மக்கள் மக்களாக வாழ்வதற்கு இன்றியமையாத அற நெறிகளையும், அற ஒழுக்கங்களையும் கருப் பொருளாகக் கொண்டு விரித்துக் கூறுகின்றன.

**நீதிச் சதகங்கள் நீதி கூறும் முறைகள்**

நீதிச்சதகங்களில் புலவர்கள் நீதியையுணர்த்தும் முறைகளை ஆறாகப் பகுக்கலாம். அவை:

1. நீதிக்கருத்துக்களை நேரடியாக உணர்த்துதல்
2. இதிகாசக் கதைகளைக் கூறி நீதி உணர்த்துதல்
3. புராணக் கதைகளைக் கூறி நீதி உணர்த்துதல்
4. பழமொழிகளைக் கூறி உணர்த்துதல்
5. வாய்ப்பாடுகளைக் கூறி நீதியுணர்த்துதல்.
6. மேற்கோள்களைக்கூறி நீதியுணர்த்துதல்.

அலங்காரச் சொற்கள் ஏதுமின்றி மக்களுக்கு நீதிக்கருத்துக்கள் பாடல்களின் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளன. நீதியின் வரையறை, நீதிப்படி நடந்தால் ஏற்படும் நன்மை, நடவாவிடில் ஏற்படும் தீமை ஆகியவை இந்நீதிச் சதகங்களில் கூறப்பட்டுள்ளன.

அம்முறையில் மக்கள் தங்கள் வாழ்க்கையில் கொள்ளத்தக்கன, விலக்கத்தக்கன எவை எவை என்பதை இச்சதகங்கள் வலியுறுத்துகின்றன.

**விலக்கத்தக்கன**

**கோபம்**

“கலவாது ஒருவன்தன் வாய்திறந்து சொல்லும் சொல்
ஓவாது தன்னைச் சுடுதலால் - ஓவாதே
ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றும்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து" 15

என்ற நாலடியாரின் வரிகளுக்கு ஏற்ப கோபத்தை அடக்குதலே நல்வாழ்க்கைக்கு வழிவகுக்கும். மக்கள் தம் வாழ்வில் இருந்து முதலில் விலக்க வேண்டியது கோபத்தைத்தான். ஏனெனில் கோபம் தீய விளைவுகளை ஏற்படுத்தும். தம் இனத்தையே அழித்துவிடும் என்று கூறுகிறது.

"கோபமே பாவங்களுக்கெல்லாம் தாய், தந்தை, குடியைக் கெடுக்கும். எதனையும் அடையவிடாது. துயர் கொடுக்கும், புகழைக் கெடுக்கும். உறவை அறுக்கும். பழியை உண்டாக்கும். அருளைக் கெடுக்கும். ஒருவரையும் சேர்க்காமல் தனியனாக்கும். நரகக்குழியில் வீழ்த்தும்" **(அறப்ப:87)** என அம்பலவாணக்கவிராயர் வலியுறுத்துகிறார்.

'கோபமே ஈனமாம் கோபமே எவரையும்
கூடாமல் ஒருவன் ஆக்கும்
கோபமே மறலிமுன் கொண்டுபோயத் தீயநர
கக்குழி யினிற் றள்ளுமால்..'

கோபம் பெருகுற்றங்கள் மூன்றின் பிறப்பிடமாக இருப்பது. நல்ல குணத்தை அழிக்கும். தன்முன் உள்ள ஒன்றின் தன்மையை அறியவிடாமல் கெடுக்கும். பெருமைகள் யாவையும் அழிக்கும். தவத்தைக் கெடுக்கும். பிறர் கூறும் சிறந்த அறிவுரையை மனம் ஏற்கவிடாது. அறிவற்ற தன்மையில் மூழ்கடிக்கும் **(கயிலாச:16)**

'மற்றவர்சொல் புத்தியும் செவிதனக் கேறாது
மடைமையின் மூழ்குவிக்கும்'

என்று விளக்குகிறது.

குமரேச சதகம் அடக்க வேண்டியவைகளுள் ஒன்றாக, 'கோபத்தை அடக்குதல் நலம் தரும். கோபத்தை மனத்திலிருந்து அகற்றினாலே மனம் அமைதி பெறும்." **(குமரேச:12)** என்று கூறுகிறது.

மனிதன் நன்னிலை அடையத் தடையாக இருக்கும் இக்கோப உணர்வினை முற்றிலும் நீக்கினால் மனித குலம் நற்பயன் அடையும் என்பதை இம்மூன்று சதகங்கள் கூறுகின்றன.

**பொறாமை**

மக்கள் நல்ல மனம் படைத்தவர்களாக இருக்க வேண்டும். பிறர் தங்களின் சுயமுயற்சியின் வாயிலாக வாழ்வில் உயர்வதைப் பார்த்துத் தாங்களும் முயற்சியுடன் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். மாறாக, "வளமான நாட்டில் வீரம் உடையவர்கள். சிறந்த கல்வி கற்றோர்,

செல்வம் படைத்தோர், அழகு பொருந்தியவர்கள் ஆகியோரின் உயர்வைப் பார்த்து, இவையெல்லாம் நமக்குக் கிடைக்கவில்லையே! என்று மனம் வெதும்பித் தீயவர்கள் அனைவரும் பிள்ளை பெற்றவர்களை நோக்கி, பெருமூச்சு விடும் இயல்புடையவர்களாவர்" **(தண்டலை:18)** என்ற கருத்தை நோக்கும் போது பொறாமைக் குணத்தால் வாழ்க்கை வளம் குறையுமே தவிர முயற்சியுடன் வாழ்பவர்களுக்கு எந்தக் குறையும் நேராது.

ஆகவே பொறாமையை விலக்கி வாழ்வதே நலம் தரும் என்பதை வள்ளுவரும்,

"அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்." 16

பொறாமைப்பட்டு வளம் பெற்றார் இலர், அவ்வாறே பொறாமைப் படாமையால் வறுமையுற்றாரும் இலர் என வலியுறுத்துகிறார்.

**தற்பெருமை**

ஆணவம் அழிவைத் தரும் என்பதனால் மனத்தில் ஆணவமாகிய குணத்தைச் சேரவிடல் ஆகாது.

'சூரபதுமனின் உடல் வலிமையும், இராவணனின் துணிச்சலும், கம்சனுடைய ஆற்றலும், இரணியன் வரத்தால் பெற்ற ஆற்றலும்,; வாலியின் அழிவற்ற வலிமையும், துரியோதனன் முதலான நூறு பேர்களின் ஆற்றலும், மதுகைடவர் பெருமையும், மகாபலிச் சக்கரவர்த்தியின் வீரமும், சோமுகாசுரனின் வலிமையும், கீசகனின் பெருமையும் திரிபுர அசுரர்களின் நினைவும், தக்கனின் அழகும், இவர்களின் செல்வ வளமும், நிலை பெற்றனவா? இல்லை. அவரவர்கள் கொண்ட ஆணவத்தினால் அழிந்தன." என்று ( **குமரேச:47**) எடுத்தியம்புகிறது.

**தீயோர் நட்பு**

தீயவர்களின் சேர்க்கையினால் எத்தகைய காரியமும் கெடும் என்பதை குமரேச சகதம் எடுத்தியம்புகிறது.

"யானை தண்ணீரில் முகம் பார்க்க, தவளை தாவி நீரைக் கலக்கிப் பார்க்க முடியாதபடி திரியும். பலர் ஒன்றுகூடி வீடு கட்டினாலும் குறை கூற ஒருவன் இருப்பான். சான்றோர்கள் உணவில் ஈ கிடந்து அதன் சிறப்பைக் கெடுக்கும். அரசன் கட்டளையிட்டாலும் நல்ல பணியாளர்கள் இல்லை என்றால் வேலை கெடும். சிங்கத்திற்கும், எருதுக்கும் உள்ள நட்பைச் சிறுநரி கெடுத்தது அறிந்ததே." **(குமரேச:78)** எனத் தீயோர் சேர்க்கையினால் ஏற்படும் தீமையைக் கூறுகிறது. இக்கருத்தையே நான்மணிக்கடிகையும்,

"குலம் சிதைக்கும் கூடார்கண் கூடிவிடின்" 17

என்று கூறுகிறது.

"செம்பினைப் பொன்னாக்கும் இரசவாத வித்தைகள் செய்யலாம், முதியவர்களை நரை திரை இல்லாத இளமையாக்கலாம், நற்குணங்களும் விவேகமும் இல்லாத கல் நெஞ்சக்காரர்களை இதமான சாத்திரங்கள், ஞான நெறி, நீதிகளைச் சொல்லித் திருப்பவோ, திருத்தவோ இயலாது" **(வடிவேல்:21)** மூர்க்கருக்கு நல்லகுணம் வாராது என வலியுறுத்துகிறது.

"வம்பர், நோய், பூசாரி, கொலை பாதகர், திருடர், சாராயம், பாம்பு கடித்தது போன்ற மயக்கம் தலைக்கு ஏற்றும் பழங்கள், பொய் வழக்கு, நெருப்பு, பரத்தையர், மண், அரசர் இடும் அபராதம், (**அண்ணாமலை:**295) இவற்றில் தீயோர் தேடும் பொருள், செல்வம் அனைத்தும் செலவிடப்படும்" எனக் கூறுகிறது.

நம் எண்ணங்களைப் புரிந்துகொண்டு ஒத்துப் போகாதவர்களைப் பிரிந்திருந்தால் அவர்களால் நமக்கு ஏற்படும் துன்பமும் நம்மை விட்டு நீங்கிவிடும் என்பதை " தெரிவிலா தாரைப் பிரியப் பிரியுமாம் நோய்"18 என நாலடியார் கூறுகிறது.

## பொய்மை, புறங்கூறுதல்

'உளவு சொல்பவன் இல்லாவிட்டால் ஊர் கெடாது" என்ற முதுமொழிக்கு ஏற்ப 'கொல்லன் உலையில் குறடும், சம்மட்டியும்

இரும்புகளை அடக்கும் குணம் பெற்றவை. கோடாரிக் காம்பு மரமாக இருந்தும் தன் குலத்தை அழிக்க உதவும். அழகான பார்வை கொண்ட குருவி தன் அருகில் வரும் குருவிகளைக் கட்டுப்படுத்தும். கலைமான் தன் இனம் சேர்க்கும். நல்ல குடியில் பிறந்து பொய் சொல்வோர் குடும்பத்தைக் கெடுப்பர்." **(குமரேச:91)**

"பொய்ச் சான்று கூறுபவன் கெட்டழிவான்"19 என்று விவிலிய நீதி மொழியும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன.

"யாசிப்பவர்களின் தன்மையறிந்து, உதவுதல் வேண்டும். பசுவுக்கு வைக்கோலைக் கொடுத்தாலும் அது இனிய பாலைத் தரும். பாம்புக்கு பால் வார்த்தாலும் அது கொடிய நஞ்சையே வெளிப்படுத்தும் அதுபோல, உண்மையுள்ள சான்றோர்களுக்குச் செய்யும் அறங்கள் எல்லாம், ஒன்று பலவாகும். அவ்வாறின்றிப் புறங்கூறும் சிறுமை மதி உடையவர்க்கு எவ்வளவு அதிகம் பொருள் கொடுத்தாலும், பாவம் தான் நேரிடும்." (**வடிவேல்:29**) என புலவர் முத்துக்குமரன் வலியுறுத்துகிறார்.

"கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு" 20

என்று குறளும் விளக்குகிறது.

**நிலையாமை**

இவ்வுலகமும், உடலும், செல்வமும் நிலையற்றவையாகும். இவற்றை நிலைத்த இன்பம் அளிக்கக்கூடியவை என்று கருதாது இறையன்பில் பற்று வைக்க வேண்டும் என்ற நீதி நெறியினைச் சதகங்கள் வலியுறுத்துகின்றன. வாழ்க்கை, யாக்கை, செல்வ நிலையாமைகள் விளக்கப்படுகின்றன.

**வாழ்க்கை நிலையாமை**

நில்லா உலகில் நிலைத்த இன்பத்தைப் பெற இயலாது. இறைவனின் திருவடிகளை வணங்கி இறையருளைப் பெற வேண்டும் என்பதை அம்பலவாணக் கவிராயர்,

"உடல் ஒரு நீர்க்குமிழி, வாழ்வோ கானக வெள்ளம், புதல்வர், மனைவி, போன்றோர் கானல் நீர், இளமையும் உடல் வலிமையும் அழகும் மஞ்சள்வெயில், உயிரோ திறந்த வெளியில் ஏற்றப்பட்ட விளக்கு என எண்ணி வீணில் காலத்தைக் கழிக்காமல் இறைவனை நினைத்து வழிபட வேண்டும்"(**அறப்ப:19**) என்று வலியுறுத்தியுள்ளார்.

### யாக்கை நிலையாமை

யாக்கை நிலையாமை பற்றிக் குருபாததாசர்,

"உலகில் வாழ்ந்தவர்கள் இறவாமல் இல்லை, சேர்த்த பொருளை அள்ளிக்கொண்டு சென்றவர்களும் இல்லை, பணியை நம்பி ஏற்பூட்டும் கதையெனப் பாழான உடலை நம்பிப் பார் மீது இன்னும் வாழ்வோம் என்று பல கோடி எண்ணங்களால் மாய்வதே அல்லாமல் இறைவனின் திருவடிகளை வணங்கி முக்தி பெறல் வேண்டும்."(**குமரேச:71**) என விளக்குகிறது.

### செல்வ நிலையாமை

தேடிய செல்வங்கள் எல்லாம் மக்களிடத்தில் நிலைத்து நிற்பதில்லை. இச்செய்தியைக் குமரேச சதகம்,

"நாடு காடாகும், காடு நாடாகும் சந்தை பல கூடுவதும், கலைவதுமாயிருக்கும். நிலவும் இருளாகும், இருள் கழிந்து பகலாகும். நிதியோர் வருந்திடுவர், வறியர் வளம் பெறுவர். மாடு, மனை, மனைவி, மக்கள், செல்வம் யாவும் உண்மையல்ல, கனவுகளாகும்." **(குமரேச:87)** என்ற கருத்தின் வாயிலாகப் புலப்படுத்துகின்றது.

### கொள்ளத்தக்கன

### ஒழுக்கம்

ஒழுக்கம் எனப்படுவது வாழ வேண்டிய நெறிமுறைகளுடன் வாழ்தலாகும். ஒழுக்கமில்லாதவர்க்கு உயர்வு இல்லை. ஒழுக்கமே எல்லாச் சிறப்புகளையும் தரவல்லது. எனவே, நன்னடத்தையுடன் வாழ

வேண்டும். ஒழுக்கமின்றிப் பிற பண்புகளால் எவ்விதப் பெருமையும் இல்லை என்பதை படிக்காசுப் புலவர்,

"மனிதன் ஒழுக்கத்துடன் வாழ வேண்டும். ஒழுக்கம் கெட்டு வெற்றிச் சின்னத்துடன், ஊது கொம்பும், சிவிகையும், சிவிகையர்களும் சூழ்ந்து உலா வருவதால் எவ்விதப் பெருமையும் இல்லை"(**தண்டலை:**34) என கூறுகிறார்.

இக்கருத்தை குறளும்,

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி" 21

என்று ஒழுக்கமே மேன்மையைத் தரும். ஒழுக்கக் கேட்டால் அடையத்தகாத பழியை அடைவார்கள் என்று ஒழுக்கமுடைமையின் சிறப்பைக் கூறுகிறது.

**பொறுமை**

பொறுமை மனிதனுக்கு இன்றியமையாதது. இந்த குணத்தால் எத்தகைய வலிமையான எதிர்ப்பையும், தகாதவர்களின் செயல்களையும் வெல்ல முடியும். பொறுமையால் பெறும் நன்மைகள் ஏராளம். பொறுமை இழப்பதனால் வரும் துன்பங்களும் அதிகம். ஆகவே, 'பொறுத்தார் பூமியாள்வார், பொங்கினவர் காடாள்வார்' என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில்,

பாண்டவர்கள் கௌரவர்களால் பல துன்பங்களை அனுபவித்த போதும் தங்கள் மனத்தில் கோபம் கொண்டார்களா? இல்லை. மாறாக அதனை பொறுமையுடன் ஏற்று, எதிர்கொண்டனர். அதுபோல உரிமையான பொருட்களை ஒருவர் வலிந்து எடுத்துக் கொண்டாலும், அடித்தாலும், இழிவுப்படுத்தினாலும், பொறுமையுடயவர்களே அரசாள்வார்கள். இல்லாதோர் காடாளச் செல்வார்கள்" (**தண்டலை:**17) என்று பாரதக்கதையின் வாயிலாக விளக்குகிறது.

"சாந்தனையும் தீயவே செய்திடனும் தாம் அவரை

ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் - மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்" 22

தன்னை வெட்டுவோருக்கும் நிழல்தரும் மரம் போல் அறிவுடையோர் பொறுத்திருப்பர்; என்று பொறுமையின் தனித்தன்மையை மூதுரை எடுத்தியம்புகிறது.

**ஒற்றுமை**

"பனை, தென்னை முதலான மட்டைகளின் சருகுகள் பல சேரக் கயிறாக்கி வலிமை மிக்க யானையையும் கட்டலாம், நீர்த்துளிகள் ஒன்றாகி ஆறாயின், குளத்தையும் ஏரியையும் நிறைவிக்கலாம், பஞ்சு பல சேர்த்து நூலாகவும் ஆடையாகவும் செய்யலாம், சீலையுடன் கோல் சேர்ந்து பெருமை உடைய குடையாக்கலாம், அரிசியோடு தவிடு உமி கூடினால் நெல் முளையாக்கி விளைவிக்கலாம். அதுபோல,

"மனம் ஒத்த நேயமோடு கூடியொருவர்க்கொருவர்
வாழின்வெகு வெற்றி பெறலாம்"

மனம் பொருந்திய அன்புடன் ஒருவர் கூடி வாழ்ந்தால் வாழ்க்கையில் வெற்றி பெறலாம்" **(அறப்ப:32)** என 'ஒற்றுமையின் வலிமையை' எடுத்தியம்புகிறது.

உலக இயற்கையறிந்து யாவரொடும் பொருந்தி நடக்கும் முறையே சிறந்த பண்பாகும். இதனை,

"பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்" 23

என்ற கலித்தொகைப் பாடலால் அறியலாம். மிக வலிமை உடையவராக இருந்தாலும் தனிநெறியில் வாழாது ஊருடன் கூடி ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்ற கருத்தை தண்டலையார் சதகம்,

"போர்களத்தில் வெற்றி பெற்றுச் சிறந்த வீரர்களுக்குள் சிறந்த வீரர் இவர் என்னும் பெருமையை அடைந்தவரும், நீதியோடு நடக்கின்ற

உலகத்தில் அதுபோல் வாழ்வதே அறமாகும். எல்லோரும் செல்லும் நல்வழியில் நாமும் ஒன்றுபட்டுச் செல்வதே அறிவுடைமையாகும்"

"நேரோடும் உலகத்தோ டொன்றுபட்டு
நடப்பதுவே நீதி ஆகும்!" **(தண்டலை:82)**

'ஊரோடு உடன் ஓடு', 'ஊருடன் கூடி வாழ்' என்பதற்கேற்ப உலக நடைமுறையை ஒட்டி சமூகத்தில் அனைவருடன் சேர்ந்து வாழ்வதே நன்மை தரும். 'ஒன்றுப்பட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே' என்பதை விளக்குகிறது.

**மானம்**

"குலப் பெருமையை அழியாது காக்கும் மன உணர்ச்சியே மானம் எனப்படுகின்றது. தன் நிலையில் தாழாமையும், தாழ்ந்தால் உயிர் வாழாமையும் மானமுடையாரிடம் காணப்படும்" என்று தமிழரது தனிப்பண்பினைச் சேரமான் கணைக்கால் இரும்பொறையின் புறப்பாடலால் அறியலாம்.

"கிடந்துயிர் மறிகுவதாயினும் மானமழுங்க வரும் செயல்களைச் செய்தால் கூடாதென்ற" கருத்தினை அகநானூற்றுப் பாடலும் எடுத்துரைக்கின்றது. மானத்தின் இன்றியமையாமையைக் குமரேச சதகம் பின்பவரும் கருத்தின் வாயிலாக எடுத்துரைக்கின்றது.

"தோல்வியடைய நேர்ந்தாலும் வீரன் ஒருவன் போரில் உயிர்விடும் வரையில் பின்னடைய மாட்டான், துன்பம் பல வந்தாலும் புலி தான் உயிர்விடும் வரையிலும் தன் தோலைக் கொடுக்காது, சான்றோர்கள் சொன்ன சொல் தவற மாட்டார்கள், கவரிமான் தான் உயிர் வாழும் நாள் வரை தன் உடலில் இருந்து ஒரு மயிரையும் இழக்காது. வரக் கூடாத துன்பம் வந்தாலும் கற்புடைய பெண் தன் கற்பை இழந்து நடவாள்." **(குமரேச:66)** என விளக்குகிறது.

இக்கருத்தினையே வடிவேல் சதகம்,

"தனைநம்பி னோர்களை அரிசிவ னெதுக்கினும்
தளர்ந்துகை விட்டிடாமல்
சிலைமிகு கிரீடிபோல்க் காப்பரே மானவரர்"**(வடிவேல்:24)**

என்று "தன்னைத் தஞ்சமென்று அடைந்தவர்களை திருமால் சிவன் எதிர்த்தாலும் கைவிடாமல் அரசனைப்போலக் காப்போர் மானமுடையவர்களாவர்" என மானமுடையோரின் இயல்பினை விளக்குகிறது.

"கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம் வீழ்ந்த துண்ணாதிறக்கும் - இடமுடைய
வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் மழுங்க வரின்" 24

என்ற நாலடியாரின் வரிகளுக்கு ஏற்ப, மானமுள்ள 'மகாபுருடன் கதை'யினை, "நாள்தோறும் நீர் எடுத்துச் செல்லும் கலசம் கீழே விழுந்து உடைய, வேறொரு கலசம் வாங்கத் தன்மானம் இடம் தராததால் வருந்தி அழுதான் உத்தமன். மானம் இழந்தபின் உயிர் காப்பது என்ன?" **(செயங்:75)** என்ற பழமொழிக்கு ஏற்ப மானத்தின் சிறப்பை இக்கதையின் வாயிலாக விளக்கிச் சொல்கிறது.

## நடுவுநிலைமை

நடுவு நிலைமை என்பது நியாயம் எதுவென ஆராய்ந்து பார்த்து அதன்வழி ஒழுகுதலாகும். சரியானது என்பதை உணர்ந்து தைரியமாக பின்பற்றுவது அறநெறிக்கு அரணாக அமையும். நடுவு நிலைமையின் இன்றியமையாமையைக் குமரேச சதகம்,

"தன்னிடம் வந்த வழக்கில் இலஞ்சப்பணம் கிடைக்கும் எனவும், நண்பர், பகைவர், பழக்கமில்லாதவர், செல்வந்தர், வறியோர் என நினைத்து விருப்பு, வெறுப்புக்களைக் காட்டாமலும், சபையோர் ஏற்றுக் கொள்ளும் வகையில் நடுநிலையுடன் நின்று துலாக்கோல் போல் கணித்து நீதி கூறுவது அறமாகும்" **(குமரேச:61)** என்ற கருத்தின் வாயிலாக வலியுறுத்துகிறது.

ஒருதலைப்பட்சமாக நீதிவழங்குதல் கூடாது. அவ்வாறு நீதி வழங்கினால் எத்தகைய துன்பம் அனுபவிப்பர் என்பதையும் குமரேச சதகம்,

“ஒருதலைப்பட்சமாக வந்தவரின் முகம் பார்த்து தீர்ப்பிடுவோர் மலைக்குரங்காவார்கள். அவர்களின் வீட்டில் உடனடியாக வெள்ளெருக்குத் தோன்றும். வீடு பாழாகும் உறவினர் பிரிந்து விடுவர். மேலும், ஏழேழு பிறவியிலும் கால் ஊனமாகி வருந்துவர். மூதேவி குடியிருப்பாள். நிலமும் இவர்களைத் தாங்க முடியாமல் அச்சம் கொள்ளும். பிறர் பழி கூறுமாறு இறப்பு வரும். எப்போதும் நரக வாழ்வை அனுபவிப்பர் என்று பெரியோர் கூறுவர்” **(குமரேச:62)** என விளக்குகிறது.

**இன்சொல்**

பிறர் மனம் மகிழ முகம் மலர்ந்து, அன்பு கலந்த சொற்களைக் கூறுதல் இன்சொல் கூறுதலாகும். “இன்சொல் ஒருவன் வாழ்வை அழகுபடுத்துவதோடு அறம் பெருகித் தழைப்பதற்கும் வழிகோலும். நல்லவை நாடி இனியவை கூறும் வழக்கம் நல்வாழ்விற்கே அடிப்படையாகும். அதனால் இனிய மொழி கூறி அறம் வளர்க்க இயலும் என்ற கருத்தினைப் படிக்காசு புலவர்,

‘நற்கமல முகம்மலர்ந்தே உபசாரம்
மிக்கஇன்சொல் நடத்தல் நன்றே’

என “பொன்னாலான குடையும், ஆடையும், அணிகலன்களும் கொடுப்பது என்ன சிறப்புடையதோ என்பதை அறிந்து முகமலர்ச்சியுடன் ஆதரித்து இனிய மொழி கூறுதலே நல்லது. அவ்வாறு செய்வது கரும்பினால் ஆக்கப்பட்ட சர்க்கரைப் பந்தலிலே தேன் மழை பொழிவது போலாகும்” **(தண்டலை:10)** என்று ‘இன்முகத்துடன் அறம் செய்தல்’ வேண்டும் என்று விளக்குகிறது.

**கல்வி**

கேடில் விழுச்செல்வமான கல்வியை வலியுறுத்தாத நூல்கள் இல்லை எனலாம். கல்வியின் மேன்மையை பின்வரும் நாலடியார் பாடலடிகளால் அறியலாம்.

“குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே அழகு”25

என்று கூறுகிறது. “ஒருவன் மதிநன்று மாசு அறக் கற்பின்” என்று நான்மணிக்கடிகையும் கற்றலின் நீதியை விளக்குகிறது. இவ்வாறு பல நூல்களில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ள கற்றலின் சிறப்பினை,
“உலகில் உள்ள பொருள்களிலெல்லாம் நன்மை தரும் பொருளாக விளங்குவது கல்வி. அதுவே நிலையானதாகும். கல்வி நெருப்பால் உருகாது. நீரால் கரையாது. திருடர்களால் திருட இயலாது. மன்னன், பரத்தையர் போன்றோரால் சேதத்திற்கு உள்ளாகாது. மற்றவர்க்குக் கொடுத்தாலும் குறைவு படாதது. கல்வியின் எல்லையைக் காண இயலாது. கவர முடியாது. கல்விச் செல்வத்தைப் பெறாமல் புவியில் அலைவதனால் என்ன பயன்? ஒன்றுமில்லை” **(கயிலாச:17)** என்று விளக்கிக் கூறுகிறது.

**நல்லறிவு**

எத்தகைய கலையாக இருந்தாலும், எத்தகைய செயலாக இருந்தாலும் அதனை முறையாக, முழுமையாக தெளிவான அறிவுடன் கற்கவும், செயல்படுத்தவும் வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் அதனை மேற்கொள்ளாமல் இருப்பது நலம். ‘அரைகுறைக் கலை சபையேறாது. சபையேறினாலும் அது நன்மை தருவதாகாது.’

“இசையைத் தடுமாற்றத்துடன் பாடுவதை விட அதைப் பாடாமல் இருப்பதே சிறந்ததாகும். தெளிவற்ற கல்வி, கேள்வி அறிவினை விடக் கற்காமல் இருப்பதே சிறப்பாகும். எப்போதும் தெளிவில்லாத நட்பைக் கொண்டிருப்பதை விடப் பகையே மேலானதாகும்.” (**தண்டலை:83**) எனத் தெளிந்த அறிவின் தேவையை கூறுகிறது.

"எருதை இருமூக்கிலும் கயிற்றைக் கோத்து அதன் வலிமையை அடக்கி வசமாக்கலாம், மதயானையை அங்குசத்தாலும், பாம்பை மந்திர தந்திரத்தாலும், குதிரையைக் கடிவாளம் கொண்டு அடக்கலாம். துன்மார்க்கரைப் மாதர் வாயிலாக வயப்படுத்தி அடக்கியாளலாம். பெரியோர்கள் தமக்கு உண்டாகும் சினத்தை அறிவால் அடக்கி மேவலாம்" **(அறப்ப:42)** என்று எதனை எவற்றால் கையாளுவது நல்லறிவு என்பதையும், அவற்றின் வழியையும் விளக்குகிறது.

**பெரியோர் சொல்**

சான்றோர் சொல்லைத் தட்டக் கூடாது. அவர்களின் சொல்லைத் தட்டாமல் கடைப்பிடிப்பது என்றென்றைக்கும் நமக்கு நன்மையைத்தான் தரும் என்பதை குமரேச சதகம் பின்வறுமாறு கூறுகிறது.

"பெற்றோர் சொன்ன சொல் கேட்டு நடந்தவன் தசரதன் மகன் இராமன். அண்ணன் சொன்ன சொல் கேட்டு நடந்தவர்கள் தருமனின் தம்பிகள் நால்வார். ஆசிரியர் சொல் கேட்டு நடந்தவன் அரிச்சந்திரன். தன்னை நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று கூறாத சொல்லைக் காத்தவன் கர்ணன். இராமனின் சொல்லைக் காப்பாற்றியவன் அனுமான். ஒழுக்கமுடன் கணவன் சொல்லை உலகில் காத்தவள் நளாயினி" **(குமரேச:45)** என்று அனைவரும் பெரியோர் சொல்லைத் தட்டாமல் காத்ததால் பெரும் புகழைப் பெற்று உலகத்தவரால் மதிக்கவும் பெற்றனர்.

சான்றோர்கள் நடுவுநிலை தவறாத இயல்பினைக் கொண்டவர்கள் என்பதை தருமர் கதையின் மூலம் செயங்கொண்டார் சதகம் கூறுகிறது.

பிருஷா மிருகத்திற்கும், வீமனுக்கும் வழக்கு ஏற்பட்ட போது, தருமர் வீமன் உடலில் பாதி அம்மிருகத்திற்கு உணவாக வேண்டுவது என்று தீர்ப்பு வழங்கினார்." **(செயங்:22)** சீனி, வெல்லம் எனப் போட்டு நாழிப்பால் தந்தாலும் சான்றோர் நடுவுநிலை தவற மாட்டார்கள் என விளக்குகிறது.

**அன்னதானம்**

தானங்களில் எல்லாம் சிறந்த உயர்ந்த தானம் அன்னதானமேயாகும். உணவிடும் போது போதும், போதும் எனச் சொல்லிக் கையசைத்து, 'வேண்டாம்' என்று சொல்லுகின்ற அன்னதானத்துக்கு இணையானது, வேறு ஒன்றுமே இல்லை என்பதை,

"பொன், வெள்ளியால் செய்த பாத்திரங்கள் கொடுப்பதும், பூமிதானம் கொடுப்பதும், கோ ( பசு) தானம் கொடுப்பதும், சொர்ணம், உடை, மிதியடிகள், போன்றவற்றைக் கொடுப்பதும், சண்டைக்குதிரை, யானை ஆயிரமாயிரம் கொடுப்பதும், பலகோடி கன்னிகாதானம் செய்து கொடுப்பதும் ஆகிய இவற்றைச் செய்தால் ஏற்பவர்கள் பேராசையுடன் இன்னும் வேண்டும் என்பர். ஆனால் அன்னதானம் அவ்வாறில்லை. அதற்கு இணையானது வேறு ஒன்றுமில்லை" **(வடிவேல்:28)** என வலியுறுத்துகிறது.

இக்கருத்தையே, "காட்டில் வேதியர்களுக்கு வேடன் ஒருவன் தினைமாவினைப் பகுத்தளித்த புண்ணியப் பயனாய் மறுபிறவியில் காசி மன்னனின் மகனாகப் பொற்கலத்தில் உணவு உண்ணும் பேற்றோடு பிறந்து வாழ்ந்தான்."(**செயங்:102**)என்று அன்னதானத்தின் உயர் பேற்றினை விளக்குகிறது.

"சோற்றை ஆருயிர் மருந்து என்றும், அதனை வழங்குவோரை ஆருயிர் மருத்துவர்" என்றும் சாத்தனார் புகழ்வார். பசி நோயிலிருந்து தான் ஏனைய புற நோய்களும், அக நோய்களும் பிறக்கின்றன.

சான்றோர் குணங்களில் மிகச் சிறப்பான, உயர்ந்த நற்செயலாக அன்னதானத்தை குமரேச சதகம்,

"அன்னதா னஞ்செய்தல் பெரியோர்சொல் வழிநிற்றல்…" **(குமரேச:99)** என முதற் வரியில் முதல் சீராக வலியுறுத்துகிறது.

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்க்கொடுத் தோரே" 26

என்று அன்னதானத்தின் மேன்மையை மணிமேகலை விளக்குகிறது.

பாரதப்போரில் சோறு படைத்தலால் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் புகழ் பெற்றான். ஆகவே சிறந்த அறமாகிய அன்னதானத்தை ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டியது முக்கியம் என இச்சதகங்கள் வலியுறுத்துகின்றன.

**அடக்கம்**

உயர்ந்த குணம் உடையவர்கள் எந்த நிலையிலும் அடக்கமுடன் இருப்பார்கள். குறைக்குணம் உடையவர்கள் அடக்கம் இல்லாத் தன்மையினால் தாங்கள் யார் என்பதை இனம் காட்டுவார்கள்.

'அற்பருக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியிற் குடை பிடிப்பர்' என்ற பழமொழிக்கு ஏற்ப, "அறிவு நிறைந்தவர்களுக்கு நல்வாழ்க்கை கிடைத்தால் அனைவரிடமும் பணிவாக நடப்பர். அறிவற்றவர்களுக்கு நல்வாழ்வு வந்தால் மனதில் மிகுந்த ஆணவம் கொண்டு அனைவருக்கும் துன்பம் செய்வார்." (**தண்டலை:**57) என அடக்கமே மேன்மையைத் தரும் என்று விளக்குகிறது. குறளும்,

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்" 27

அடக்கமானது அதனை உடையவனை அமரருள் சேர்த்து வைக்கும். அடங்காமையோ பேரிருள் ஆகிய நரகத்தில் சேர்த்துவிடும் என்று அடக்கத்தின் தன்மையை விளக்குகிறது.

**முடிவுரை**

உலகிலே வாழும் எல்லா மக்களும் இன்பவாழ்வு வாழ வேண்டும் என்பதே பண்டைத் தமிழர்களின் நோக்கம். பழந்தமிழ் நூல்களிலே தமிழர்க்குரிய அறம் இது தமிழர் அல்லாதார்குரிய அறம் இது என்று பிரித்துச் சொல்லப்படவில்லை. உலக மக்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளத் தக்க நல்ல நெறிகளையே கூறியிருக்கின்றன. இக்கூற்றுப்படி மனிதர்கள் எந்நாட்டவராயினும்,

எச்சமயத்தவராயினும்,எம்மொழியினராயினும்,எக்காலத்தவராயினும் மனத்தால் மாசற்று இருப்பதே அறமாகும். உலகோர் அனைவராலும் ஏற்றுக்கொள்ளத் தக்க அறம் என கூறலாம்.

மேலே குறிப்பிடப்பட்ட சதகங்கள் அனைத்தும் மக்கள் செய்ய வேண்டிய அறங்களை வலியுறுத்தியும், செய்யக் கூடாதவைகளை விலக்கும் படியும் வலியுறுத்தி கூறியுள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. தொல்காப்பியனார், பொருளியல். நூற்பா.27 (இளம்)
2. ந.சுப்புரெட்டியார்,தமிழ் இலக்கியங்களில் அறம் – நீதி -முறைமை. ப.7
3. களவியல். நூற்பா. 1 (இளம்)
4. செய்யு. 106 (இளம்)
5. நன்னூல் - 10
6. மு.சு.நூ. ப.10
7. ச. தண்டபாணி தேசிகர், வள்ளுவர் பொய் மொழி பேரறிஞர் கட்டுரைகள், ப. 89
8. க.த. திருநாவுக்கரசு, திருக்குறள் நீதி இலக்கியம் ப. 23
9. மு. வரதராசனார், அல்லி, ப. 109
10. மு. வரதராசனார், நெஞ்சில் ஒரு முள், ப.321
11. திருக்குறள், பொருளகராதி, மு. கோவிந்தசாமி ப. 28
12. தமிழ்ப் பேரகராதி, தொகுதி -1, ப. 174
13. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி, முதற்பகுதி, ப. 523
14. மீனாட்சி சுந்தரம், பன்மையில் ஒருமை, ப. 98
15. நாலடியார், பா.63
16. திருக்குறள் : 167
17. நான்மணிக்கடிகை : 21
18. நாலடியார் : 247
19. விவிலியம், நீதிமொழிகள் : 21:28
20. திருக்குறள் : 819
21. திருக்குறள் : 137

22. மூதுரை : 30
23. கலித்தொகை : 133:8
24. நாலடியார் : 300
25. மேற்படி : 131
26. மணிமேகலை 11: 95,96
27. திருக்குறள் : 121

## முதன்மை நூல்கள்

1. குமரேச சதகம்
2. கயிலாசநாதர் சகதம்
3. வடிவேல் சதகம்
4. அறப்பளீசுர சதகம்
5. அண்ணாமலைச் சதகம்
6. தண்டலையார் சதகம்
7. செயங்கொண்டார் சதகம்

## துணை நூற்பட்டியல்

1. நாலடியார்
2. நான்மணிக்கடிகை
3. திருக்குறள்
4. விவிலியம்
5. மணிமேகலை
6. கலித்தொகை
7. மூதுரை
8. நன்னூல்
9. தொல்காப்பியம்
10. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி
11. பன்மையில் ஒருமை
12. தமிழ்ப் பேரகராதி
13. வள்ளுவர் பொய் மொழி பேரறிஞர் கட்டுரைகள்

14. திருக்குறள் நீதி இலக்கியம்
15. தமிழ் இலக்கியங்களில் அறம் - நீதி – முறைமை
16. மு.வ - அல்லி, நெஞ்சில் ஒரு முள்